

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 5


# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: நபி (ஸல்) அவர்களின் பரம்பரை - இஸ்மாயீல் (அலை) முதல் கினானா மற்றும் அதன்பின் குரைஷிகள் வரை
- பகுதி 2: நபி (ஸல்) அவர்களின் முப்பாட்டனார் ஹாஷிமின் பாட்டனார் குஸாய்
- பகுதி 3: அப்துல் மனாஃப் மற்றும் ஹாஷிம்
- பகுதி 4: அப்துல் முத்தலிப் மற்றும் ஜம்ஜம் கிணற்றின் மறு கண்டுபிடிப்பு
- பகுதி 5: அப்துல் முத்தலிப் தனது மகன் அப்துல்லாவை பலியிடுவதாக சபதம் செய்தது
- பகுதி 6: அப்ரஹா மற்றும் யானைகளின் சம்பவம்

# பகுதி 1: நபி (ஸல்) அவர்களின் பரம்பரை - இஸ்மாயீல் (அலை) முதல் கினானா மற்றும் அதன்பின் குரைஷிகள் வரை

- அரேபியர்கள் இப்ராஹிம் (அலை) மற்றும் அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை) ஆகியோருக்கு வம்சாவளியாக வந்தவர்கள்.

- முஹம்மது நபி (ஸல்) அவர்களின் முன்னோர் அத்னான் வரையிலான பரம்பரை 21 தலைமுறைகளை உள்ளடக்கியது மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், அத்னான் முதல் இஸ்மாயீல் (அலை) வரையிலான பரம்பரைக்கு தெளிவான ஆதாரங்கள் இல்லை.



- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘அல்லாஹ் இப்ராஹீம் (அலை) அவர்களின் மகன்களில் இருந்து இஸ்மாயீல் (அலை) அவர்களைத் தேர்ந்தெடுத்தான். இஸ்மாயீல் (அலை) அவர்களின் மகன்களிடமிருந்து கினானாவையும், கினானாவின் மகன்களிடமிருந்து குரைஷிகளையும், குரைஷிகளின் மகன்களிடமிருந்து ஹாஷிமையும், ஹாஷிமின் மகன்களிடமிருந்து என்னையும் அல்லாஹ் தேர்ந்தெடுத்தான்’’. – (ஸஹீஹ் முஸ்லிம்).


- மேற்கண்ட ஹதீஸின் மூலம் நபி (ஸல்) அவர்களின் பரம்பரையைப் பார்ப்போம்.

- ‘‘அல்லாஹ் கினானாவை இஸ்மாயீலின் மகன்களில் இருந்து தேர்ந்தெடுத்தான்’’ – கினானா ஒரு புகழ்பெற்ற அரேபியர். அவர் மிகவும் புத்திசாலியாகவும், தைரியமான மனிதராகவும் இருந்தார்.

- மக்கள் ஹஜ் செய்யும்போதெல்லாம் கினானாவை சந்திப்பதை ஒரு பாக்கியமாக நினைத்தார்கள். அவரது வாசகங்கள் ஞானத்தின் மேற்கோள்களாக பழம்பெரும் அரபு மொழியில் பதிவு செய்யப்பட்டன.

- ’’கினானாவின் மகன்களில் இருந்து அல்லாஹ் குரைஷிகளைத் தேர்ந்தெடுத்தான்’’ – குரைஷி குலத்தின் தந்தையாக கருதப்படும் ஃபிஹ்ர் என்பவர் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு 11 தலைமுறைகளுக்கு முந்தியவர் ஆவார்.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் சுவனம் வாக்களிக்கப்பட்ட 10 ஸஹாபாக்களும் குரைஷி குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் ஃபிஹ்ர் என்பவரின் வம்சத்திலிருந்து வந்தவர்கள்தான்.



- ஃபிஹ்ரிலிருந்து, நபி (ஸல்) அவர்களின் தந்தைவழி 5 தலைமுறைகளை அறிய முடிகிறது. அதாவது, முஹம்மது நபி (ஸல்) பின் அப்துல்லா பின் அப்துல் முத்தலிப் பின் ஹாஷிம் பின் அப்துல் மனாஃப் பின் குஸாய்.

## பகுதி 2: நபி (ஸல்) அவர்களின் முப்பாட்டனார் ஹாஷிமின் பாட்டனார் குஸாய்

- மக்கா நகரில் குரைஷிகளின் மகிமையை நிலைநிறுத்தி, அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தை வழங்கிய பெருமை குஸாய்க்கு உண்டு.

- குஸாய் காலத்தில், குஜாஹ் என்ற மற்றொரு குலத்தவர்கள் ஆட்சியில் இருந்தனர்.

- குஜாஹ் என்பது இஸ்மாயீல் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் இருந்து வந்த ஒரு குலத்தினர்கள். அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்பு, அதாவது நபி (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சிக்கு வந்தனர்.

- குஜாஹ் மக்களுக்கு முன், ஜுர்ஹும் மக்கள் ஆட்சியில் இருந்தனர். இது இஸ்மாயீல் (அலை) அவர்கள் திருமணம் செய்து கொண்ட கோத்திரம்.

- ஜுர்ஹும் கோத்திரத்தை குஜாஹ் வெளியேற்றியபோது, ஜுர்ஹும் மக்கள் ஒரு கொடூரமான செயலைச் செய்தார்கள். அவ ர்கள் ஜம்ஜம் கிணற்றை அழித்து, புதைத்து விட்டனர். குஜாஹ்வின் மக்கள் பல முயற்சிகள் செய்தும் அவர்களால் ஜம்ஜம் கிணற்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை.



- ஜுர்ஹூம் மக்கள் மக்காவிற்கு வெளியே சிறிய முகாம்களில் குடியேறினர். அவர்களிடமிருந்து வந்தவர் ஃபிஹ்ர்; இவ்வாறாக குரைஷி குலம் தொடங்கியது.

- குரைஷி குலத்திலிருந்து வந்தவர்தான் குஸாய். அவர் குஜாஹ் தலைவரின் மகளை மணந்தார். மேலும், குஜாஹ் தலைவர் மகன்களைவிட அதிக திறமைகளை கொண்டிருந்தார்.

- அவரது மாமனார் இறந்தபோது, மக்கள் குஸாய்தான் தங்கள் தலைவராக வேண்டும் என விரும்பினர். இந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி, குரைஷிகளின் ஆட்சியை மக்காவில் நிறுவ முயன்றார்.

- குஸாய் அதில் வெற்றிகண்டு, மக்கா முழுவதையும் குரைஷி கோத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தார்.

- தான் ஆட்சிக்கு வந்ததும், குஸாய் மக்காவில் பல நல்ல காரியங்களை செயல்படுத்தினார். தாருல் நத்வா (பாராளுமன்றம்) நிறுவுதல், கஃபாவைப் பராம ரித்தல் மற்றும் யாத்ரீகர்களுக்கு விருந்தோம்பல் செய்தல் ஆகிய செயல்கள் இதில் அடங்கும்.

- இந்த பணிகள் அனைத்தையும், பின்னர் அவர் தனது குரைஷி உறவினர்களிடம் ஒப்படைத்தார். இதன்மூலம் குரைஷிகளை மக்காவில் மிக முக்கியமான, மிகவும் மரியாதைக்குரிய குலமாக மாற்றினார்.

## பகுதி 3: அப்துல் மனாஃப் மற்றும் ஹாஷிம்

- அப்துல் மனாஃப் குஸாயின் மகன். இவர் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபின் பாட்டனார் ஆவார். அவர் தனது அழகிற்கும், தலைமை பண்புக்கும், திறமைக்கும் பெயர் பெற்று விளங்கினார். மேலும் குரைஷி மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டார்.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸில் குறிப்பிட்டுள்ளது: ''அல்லாஹ் குரைஷிகளின் மகன்களில் இருந்து ஹாஷிமையும், ஹாஷிமின் மகன்களிடமிருந்து முஹம்மது (ஸல்) அவர்களையும் தேர்ந்தெடுத்தான்''.

- அப்துல் மனாஃப்பின் மகன்தான் ஹாஷிம். இவர் நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் அப்துல் முத்தலிபின் தந்தை ஆவார். ஹாஷிமிடமிருந்துதான் பனு

ஹாஷிம் அல்லது ஹாஷிமின் குழந்தைகள் என்ற கோத்திரம் வந்தது.

- ஹாஷிம் தனது பெருந்தன்மைக்கு பெயர் பெற்றவர். இவர் குரைஷிகளின் பொருளாதார நிலையை உயர்த்த மிக முக்கியமான காரணமாக இருந்தார்.

- ஹஜ்ஜுக்கு வரும் மக்களுக்கு சேவை செய்யும்போது, இவர்தான் மக்காவில் வர்த்தகம் என்ற தொழிலை முதன்முதலில் ஏற்படுத்தினார்.

- ஒரு வருடம் மக்காவில் கடும் வறட்சி ஏற்பட்டு மக்கள் பசியால் வாடினர்.

- ஹாஷிம் கோடையில் ஒன்றும், குளிர்காலத்தில் ஒன்றுமாக இரண்டு பயணங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற வர்த்தக முறையைக் கொண்டுவந்தார்.

- கோடையில் அவர்கள் வடக்கே ரோம் நாட்டு எல்லைகளுக்குச் செல்வார்கள். குளிர்காலத்தில் அவர்கள் யமனுக்குச் செல்வார்கள்.

- இந்த வர்த்தக வழிகளில் இருந்து பொருட்களை வாங்கி, மக்காவிற்கு கொண்டு வந்து, யாத்ரீகர்களுக்கும், அண்டை பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகளுக்கும் விற்பனை செய்வார்கள்.




- குரைஷிகள் கஃபாவின் பராமரிப்பாளர்களாகவும், உயர்வாக மதிக்கப்படுபவர்களாகவும் இருந்ததால், அவர்கள் வணிகப் பாதைகள் பாதுகாப்பாக இருந்தது. மேலும் அவர்களின் வணிகர்கள் அண்டை பகுதிகள்

மற்றும் பிறகுடியினரைக் கடந்து செல்லும் போது அதிக வரி செலுத்த வேண்டியதில்லை.

- இது குர்ஆனில் ‘‘ரிஹ்லதஷ் ஷிதாயி வஸ்ஸைஃப்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது: ‘‘அவர்கள் குளிர்காலம் மற்றும் கோடைகால வர்த்தக பயணங்களின் போது பாதுகாப்பை அனுபவித்தனர்.’’ – (அல்குர்ஆன் 106:2)

- ஹாஷிமின் மனைவிகளில் ஒருவர் யத்ரிப்பை (மதீனாவை) சேர்ந்தவர். இவர்களுக்கு அப்துல் முத்தலிப் என்று ஒரு மகன் இருந்தார். அப்துல் முத்தலிப், நபி (ஸல்) அவர்களின் பாட்டனார் ஆவார்.

## பகுதி 4: அப்துல் முத்தலிப் மற்றும் ஜம்ஜம் கிணற்றின் மறு கண்டுபிடிப்பு

- அப்துல் முத்தலிப் யத்ரிபில் (மதீனா) அவரது தாயாரால் வளர்க்கப்பட்டார். அப்போது அவர் ஒரு அனாதையாக இருந்தார். ஏனெனில் அவரது தாயார் கர்ப்பமாக இருந்தபோது அவரது தந்தை ஹாஷிம் இறந்துவிட்டார்.

- அப்துல் முத்தலிப் தனது உறவினர்களிடம் மீண்டும் மக்காவிற்கு திரும்பியதும், அவர் தனது குடும்ப உறுப்பினர்கள் மீது தனது அதிகாரத்தை நிறுவி, மக்காவின் கட்டுப்பாட்டை எடுத்துக் கொண்டார்.

- அப்துல் முத்தலிபின் வாழ்க்கையில் நடந்த மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று ஜம்ஜம் கிணற்றின் மறு கண்டுபிடிப்பு ஆகும்.

- அப்துல் முத்தலிப், கஃபாவுக்கு அருகில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஜம்ஜம் கிணற்றைத் தோண்டுவது போன்று கனவு கண்டார். இது அல்லாஹ்விடமிருந்து வந்தது என்பதை உணரும் வரை, அவர் அந்தக் கனவை திரும்பத்திரும்ப கண்டுவந்தார்.

- அவர் தனது மகனை அழைத்துச் சென்று அந்தப் பகுதியை தோண்டினார். இறுதியாக அவர் தோண்டிய இடத்தில் தண்ணீர் வந்தது.

- அவ்வாறு தண்ணீர் கொப்பளிக்கத் தொடங்கியதும், அவரைச் சூழ்ந்திருந்த குரைஷிகளின் மற்ற பழங்குடியினர் அது தங்களுடைய சொத்து என்று வாதிட்டார்கள்.



- இதை ஏற்றுக்கொள்ளாத அப்துல் முத்தலிப், அந்தத் தண்ணீரின் மீது அவர் உரிமை கோரினார். இதனால் ஒரு கைகலப்பு ஏற்பட்டு, மக்கா மக்களிடையே பெரும் இரத்தக்களரியை உண்டுபண்ணிவிட்டது.

- அந்த நேரத்தில், அப்துல் முத்தலிப் அல்லாஹ்விடம் தன்னைக் காக்கக்கூடிய 10 மகன்களைக் கொடுத்தால் ஒரு மகனை அல்லாஹ்வுக்குப் பலியிடுவேன் என்று சபதம் செய்தார்.

- இவ்வாறாக அங்கு நிலைமை மோசமான நிலைமைக்கு சென்றதால், மக்கள் வெகு தொலைவில் வசிக்கும் தலைமைப் பாதிரியாரிடம் ஆலோசனை செய்து ஜம்ஜம் தண்ணீர் மீது யாருக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பது குறித்து முடிவு செய்யலாம் என தீர்மானித்தனர்.

- அவ்வாறு தலைமைப் பாதிரியாரிடம் செல்லும் வழியில், அப்துல் முத்தலிப் மற்றும் அவருடன் இருந்த குரைஷிகளின் பிற தலைவர்கள் பாதையை தவறவிட்டதால் பாலைவனத்தில் அலைந்து திரிந்தார்கள். அவர்கள் மிகவும் சோர்வடைந்தனர். இதனால் தாங்கள் வாழ்வது கடினம் என்றும், அனைவரும் இறந்துவிடுவோம் என்றும் அவர்கள் உணர்ந்தனர்.

- அப்துல் முத்தலிப் தனது மக்களிடம், அவர்கள் மிகவும் பலவீனமாக இருப்பதால், ஒவ்வொருவரும் தங்களை புதைக்கும் குழியை தாங்களே

தோண்ட வேண்டும் என்று கூறுகிறார்.

- எனவே அவர்கள் அனைவரும் தங்கள் கல்லறைகளைத் தோண்டத் தொடங்குகிறார்கள். அப்போது அப்துல் முத்தல்லிப் தனது கல்லறையைத் தோண்டிக் கொண்டிருந்தபோது, அவர் தோண்டிய இடத்தில தண்ணீர் பீறிட்டது.

- அந்தத் தண்ணீரில் தங்களது தாகத்தை தீர்த்துவிட்டு, அவர்கள் அனைவரும் ஒருமனதாக இது அல்லாஹ்வின் அடையாளம் என்றும், ஜம்ஜம் கிணற்றின் உரிமையை அப்துல் முத்தலிப்பிற்கு வழங்க வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டனர். இந்த முடிவுடன் அவர்கள் அனைவரும் மக்காவுக்குத் திரும்பிச் சென்றனர்.

## பகுதி 5: அப்துல் முத்தலிப் தனது மகன் அப்துல்லாவை பலியிடுவதாக சபதம் செய்தது

- அப்துல் முத்தலிபுக்கு 12 மகன்கள் மற்றும் 6 மகள்கள் இருந்தனர்.

- ஒரு நாள் அப்துல் முத்தலிப் தனது மகன்களை அழைத்து, ஒரு மகனை பலி கொடுப்பதாக அல்லாஹ்விடம் (ஜம்ஜம் தண்ணீர் பிரச்சனையின் போது) கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்.

- அவரது மகன்களின் பெயர்கள் அனைத்தும் அம்புகளில் எழுதப்பட்டு, குலுக்கலில் தேர்ந்தெடுக்க முடிவு செய்தார்.

- குலுக்கலில் அவரது மிகவும் அன்புக்குரிய மகன் அப்துல்லாவின் பெயர் வந்தது.

- அப்துல்லாவை பலியிடுவதற்காக அப்துல் முத்தலிப் அவரை கஃபாவிற்கு அழைத்துச் சென்றார். ஆனால் குரைஷிகள் இதை எதிர்த்தனர். மேலும் இதுபற்றி ஒரு பாதிரியாரிடம் ஆலோசனை செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

- அந்த பாதிரியார் அப்துல்லாவுக்கும், 10 ஒட்டகங்களுக்கும் இடையில் மீண்டும் குலுக்கல் நடத்தக் கூறினார். குலுக்கலில் அப்துல்லாவின் பெயர் வந்தால், மேலும் 10 ஒட்டகங்களை சேர்த்து விடுமாறு கூறினார்.

- இவ்வாறாக 10 முறை அப்துல்லா பெயர் வந்தது. இறுதியாக ஒட்டகத்தின்

பெயர் வந்தது.



- அதற்குள் 100 ஒட்டகங்கள் சேர்ந்ததால் அப்துல்லாவுக்குப் பதிலாக மொத்தம் 100 ஒட்டகங்கள் வெட்டப்பட்டன.

- ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''நான் அறுத்து பலியிடப்பட்ட இருவரின் சந்ததி'' (இஸ்மாயீல் (அலை) மற்றும் நபிகளாரின் தந்தை அப்துல்லாஹ் என்று பொருள்படும்).

## பகுதி 6: அப்ரஹா மற்றும் யானைகளின் சம்பவம்

- அப்துல் முத்தலிப் காலத்தில் நடந்த மற்றொரு முக்கியமான சம்பவம் அப்ரஹா மற்றும் யானைகள் பற்றியது.


- அப்ரஹா யமன் நாட்டின் ஆளுநராக இருந்தான். அந்நாட்டு மக்கள் ஹஜ் செய்வதற்காகவும், கஃபாவை தரிசிப்பதற்காகவும், ஒவ்வொரு வருடமும் யமனுக்கு வடக்கே உள்ள மக்காவிற்கு செல்வதை அவன் கண்டான்.

- மக்கள் மக்காவுக்குச் செல்வதை அப்ரஹா தடுக்க விரும்பினான். எனவே அவன் கண்ணாடியாலான ஒரு பெரிய தேவாலயத்தை கட்டினான். மேலும் மக்கள் அனைவரும் புனித யாத்திரை செய்ய தான் கட்டிய தேவாலயத்துக்கு வருமாறு கட்டளையிட்டான்.

- கினானா கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் அப்ரஹாவின் நோக்கத்தைப் புரிந்துகொண்டார். எனவே அவர் ஒரு இரவு தேவாலயத்திற்குச் சென்று, அங்கு சிறுநீர் கழித்துவிட்டு, அதன் முன் சுவர்களில் மலத்தை போட்டுவிட்டு வந்துவிட்டார்.

- அப்ரஹா இதைப் பற்றி அறிந்ததும், அவன் மிகவும் கோபமடைந்து, கஃபாவை அழிப்பதாக சபதம் செய்தான்.

- அவன் சுமார் 60,000 வீரர்கள் மற்றும் எட்டு முதல் பதின்மூன்று யானைகள் கொண்ட ஒரு இராணுவத்தை திரட்டிக்கொண்டு மக்காவிற்கு படையெடுத்து வந்தான்.



- இந்த மாபெரும் படையைப் பார்த்த அப்துல் முத்தலிப் தலைமையில் இருந்த குரைஷிகள் கஃபாவைப் பாதுகாக்க உதவி கோரி அல்லாஹ்விடம் துஆ செய்தனர். பின்னர் அவர்கள் மக்கா நகரை விட்டு வெளியேறி புறநகரில் உள்ள சில மலைகளில் முகாமிட்டு தங்கியிருந்தனர்.

- இராணுவம் கபாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, யானைகள் மேலும் முன்னேறிச்செல்லாமல் நின்று விட்டது.

- இதனால் இராணுவ வீரர்கள் யானைகளை இரத்தம் வரும் வரை அடித்தனர். ஆயினும், யானைகள் கஃபாவை நோக்கி முன்னேறவில்லை. இருப்பினும், யானைகளுக்கு வேறு திசை காட்டப்பட்டதால், அந்த திசையை நோக்கி நகர்ந்தன.

- அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் அந்த இராணுவம் திணறிக்கொண்டிருந்தபோது, அல்லாஹ் நரக நெருப்பிலிருந்து எடுக்கப்பட்ட கற்களுடன் பறவைகளை அனுப்பினான். அப்பறவைகள் அந்த கற்களை படைகளின் மீது எறிந்தன.

- அக்கற்கள் படை வீரர்கள் அல்லது விலங்குகளின் மீது விழும் போதெல்லாம், அது அவர்களின் தோல்களை உரித்து விட்டது.

- அப்ரஹா மிக மோசமான தோல்வியை சந்தித்தான். மேலும் அவனது தோள்கள் உரியப்பட்டு யமனுக்குத் திரும்பச் செல்லும் வழியில், தனது வீட்டை அடைவதற்கு முன்பு இறந்து விட்டான்.

- அப்ரஹாவின் படைகள் விரட்டியடிக்கப்பட்டதைக் கண்ட குரைஷிகள், கஃபாவைக் காப்பாற்றிய அல்லாஹ்வுக்கு நன்றி கூறி மக்காவுக்குத் திரும்பினர்.

- யானைச் சம்பவம் அந்த நேரத்தில் உலகின் பெரும்பாலான அரசியல் சக்திகளின் கவனத்தை ஈர்த்தது. மேலும் கஃபாவின் புனிதத்தை அல்லாஹ் பாதுகாக்கிறான் என்பதையும் காட்டியது.

- இந்த சம்பவம் குர்ஆனின் ஸூரா 'அல்ஃபீலில்' குறிப்பிடப்பட்டுள்ளது: ''யானையின் உரிமையாளர்களுடன் உங்கள் இறைவன் எப்படி நடந்துகொண்டான் என்று நீங்கள் சிந்திக்கவில்லையா?'' - (அல்குர்ஆன் 105: 1-5)

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு 50 முதல் 55 நாட்களுக்கு முன்பு யானை சம்பவம் நடந்தது. மேலும் இது எதிர்காலத்தில் முக்கியமான ஒரு நிகழ்வு நடக்கப்போகிறது என்பதை தெளிவாகக் காட்டியது.